# மாத்தளை செம்புவத்தை சுற்றுலாத்தளமும் இஸ்லாமியரும் - ஓர் ஆய்வு (MUSLIMS AND TOURIST ATTRACTION OF SEMBUWATTA, MATALE – A STUDY)

**லெ.தர்க்ஷிகா, திருமதி.சா.அருளானந்தம்**
நான்காம் வருடமாணவி, வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைகழகம், இலங்கை.
சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைகழகம், இலங்கை.
santhudharshika@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன ஒற்றுமை மிக்க நாடுகளில் ஒன்றாகவே இலங்கை காணப்படுகின்றது. ஆங்கிலேயரின் பிரித்தாழும் கொள்ளையினால் இந்நாட்டு மக்கள் இன, மொழி ரீதியிலான வேறுப்பாடுகளை கொண்டு தமக்குள் பிரிவினைகளை ஏற்படுத்திக் கொண்டனர். இதன் காரணமாக பல இனக்கலவரங்களும் இலங்கையில் இடம்பெற்று வருகின்றன. இருந்தபோதிலும் இவர்களிடையே ஒன்றுபட்டுவாழும் தன்மை அதிகமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்தோர் சிறப்பம்சமாகும். சிங்களம், தமிழ் என்ற இரு மொழியை பயன்படுத்தும், பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களை பின்பற்றும் மக்கள் கூட்டத்தினரே இங்குள்ளனர். இம்மதங்களில் இஸ்லாமிய மதமானது கி.பி 7ஆம் நூற்றாண்டுகளின் பின்னர் ஏற்கனவே இலங்கையுடன் வர்த்தகத்தொடர்புகளைக் கொண்டிருந்த அரேபியரால் பரப்பப்பட்டது. இதனைத்தொடர்ந்து விவசாயத்தின் மீது தமது முழுகவனத்தையும் செலுத்திய சுதேசிகள், வர்த்தகத்தை மேற்கொள்ள விரும்பவில்லை. இதன்காரணமாகவே உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்திற்கு இலங்கை மன்னர்கள் முஸ்லிம்களின் துணையை நாடினர். வரத்தகத்திற்காக தலைநகர்களுக்கு வந்தவர்கள் அங்கு தங்குவதற்காக வீடுகள் அமைக்கப்பட்டதுடன், பதவிகளும் வழங்கப்பட்டன. பிற்பட்டகாலங்களில் ஐரோப்பியரது செயற்பாடுகளால் மத்திய மலைநாட்டுப்பகுதிகளிலும் இவர்களது குடியேற்றங்கள் நிறுவப்பட்டது. மாத்தளை மாவட்டத்தினுடனான இஸ்லாமியரின் தொடர்புகள் வர்த்தகத்துடன் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னனியில் இன்று அப்பிரதேசத்தின் முக்கிய மக்கள் கூட்டத்தினராக அர்கள் மாற்றமடைந்துள்ளனர். தமக்கான தனித்துவமான அடையாளங்களைக் கொண்டபோதிலும் மற்றைய இனத்தவர்களுடன் ஒன்றுபட்டு வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். மாத்தளை மாவட்டத்தின் அரசியல், கல்வி, வியாபாரம், விளையாட்டு துறைகளில் இவர்களது பங்களிப்பானது முக்கியத்துவம் கொண்டதாகவே உள்ளது. கி.பி 18ஆம் நூற்றாணடில் இருந்து பலவழிகளிலான இவர்களது இப்பிரதேசத்தினுடனான தொடர்புகள் இன்று செம்புவத்தை சுற்றுலாத்தளத்தின் மத நம்பிக்கை ஊடாக திசைதிருப்பப்பட்டு வருகின்றமை ஆய்வுகளுக்குட்பட வேண்டியதொரு விடயமாகவுள்ளது. இங்கு வழமைக்கு மாறாக அதிகமாக இஸ்லாமியர் குறிப்பாக அரேபிய, பாகிஸ்தானிய இஸ்லாமியரது வருகையானது பல கேள்விகளை உள்ளடக்கிய நிலையில், அதற்காக குறிப்பிடப்படும் காரணங்கள் ஆதாரங்களை உள்ளடக்கியதாக காணப்படவில்லை. இருப்பினும் இவர்களது நம்பிக்கை வாயிலாகவே இன்று அவ்விடம் அதிகமாக உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்றுவருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இலங்கையுடனான அரேபியரின் தொடர்புகளைக் கொண்டு இன்று இலங்கை முஸ்லிம்கள் தமது வரலாற்றினை எழுதிவருகின்றனர். இவர்களுடைய இலங்கையுடனான தொடர்புகளைக் கொண்டு சில ஆதாரங்களை முன்வைக்கின்ற போதிலும் அவையும் பல கேள்விகளுக்கு உட்பட்டதாகவே காணப்படுகின்றன. ஆகவே இவ்வாய்வானது செம்புவத்தையுடனான இஸ்லாமியரது தொடர்புகளைப் பற்றி ஆராயும் நோக்கில், சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்கள், இலக்கியங்கள், இணையம் என்பனவற்றைக் கொண்டு விவரண ஆய்வுமுறையியலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :-** இலங்கை, இஸ்லாமியர், மாத்தளை, செம்புவத்தை.

## 1. அறிமுகம்

இலங்கையானது ஆரம்பகாலம் தொட்டே பலரை ஈர்க்கின்ற தன்மைகளை தனக்குள் கொண்டுள்ள ஓர் நாடாகும். புவியல் அம்சங்களே இதன் சிறப்புக்கு வழிவகுத்த காரணியாகும். இந்தியாவின் அரசியல் பண்பாட்டின் தாக்கங்கள் ஏறபட்டபோதிலும் தனக்காக தனித்துவ சிறப்புகளை கொண்டுள்ளமைக்கும், ஐரோப்பியரது ஆதிக்கம் ஏற்படுவதற்கும் முக்கிய காரணமாக இலங்கையின் அமைவிடமும் இயற்கை வளங்களுமே காணப்படுகின்றன. இத்தகைய அம்சங்களே இன்று அதிக சுற்றுலாப்பயணிகளை ஈர்த்துவருகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்குவகிக்கும் ஓர்துறையாக இன்று சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலைக்கு இலங்கையின் நல்ல காலநிலை, இயற்கையழகு, கடற்கரைகள், வரலாற்று பாரம்பரிய இடங்கள் போன்றனவே உதவி வருகின்றன. இத்தகைய இடங்களில் சிலவற்றின் வரலாறு தெளிவற்றதாகவும் குழப்பம் நிறைந்ததாகவும் உள்ளது. இலங்கை மக்கள் தமது வரலாற்றினை எழுதுகின்ற முயற்சியில் இலங்கையுடனான தொடர்புகளை பல புதிய கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் ஊடாக தெளிவுபடுத்த முற்பட்டுவருகின்றனர்.

இத்தகையதோர் சூல்நிலையினையே இன்று மாத்தளை மாவட்டத்தின் செம்புவத்தை பகுதி அடைந்துள்ளது.
பல்கலாசார நாடான இலங்கையின் இன ரீதியான கணக்கெடுப்பின்படி மூன்றாவது இடத்தில் இருப்பவர்கள் இஸ்லாமியர்களாவர். இலங்கயின் அரசியல், பொருளாதாரம், கல்வி, விளையாட்டு என அனைத்து துறைகளிலும் இவர்களது செல்வாக்கு அதிகமாகவே காணப்படுகின்றது. இஸ்லாம் என்ற சொல் ''கடவுளின் விருப்பத்திற்கு கட்டுப்படு'' (Submission of the will of god) எனப்பொருள்படுகின்றது. அராபியர்களிடையே மாபெரும் புரட்சியையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்திய முகமது அவர்களினாலேயே இஸ்லாமிய மதம் உருவாக்கப்பட்டது. ''அல்லாவைத் தவிர வேறு கடவுளில்லை முகமது கடவுளின் தூதர்'' என்று குரானில் கூறுவதற்கமைவாக ஒருதெய்வக் கோட்பாட்டினையே இஸ்லாமியர் பின்பற்றிவருகின்றனர். இம்மதப்பற்றாளர்கள் ஒரு கையில் வாளினையும், மறுகையில் குரானையும் கொண்டு ஆசிய, ஆபிரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மதம்பரப்பல் நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். இப்போர் புனிதப்போர் என அழைக்கப்பட்டது. இதன்தாக்கம் இந்தியாவரை காணப்பட்டதே தவிர இலங்கையில் போரின் ஊடாக இஸ்லாம் பரப்பப்படவில்லை.(கௌசிகன், 2003.பக்.338-340)

இலங்கையில் இஸ்லாமிய மதம் எப்போதிலிருந்து பின்பற்றப்பட்டு வருகின்றது என்ற விடயம் குழப்பம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. இலங்கையை பொறுத்தமட்டில் சிங்களவரின் வரலாற்றினை அறிய வம்சக்கதைகளும், தமிழரின் வரலாற்றினை அறிய யாழ்ப்பாண இராச்சியம் போன்ற இலக்கியங்களும் காணப்படுவதைப்போன்று இஸ்லாமியரின் வரலாற்றினை அறிய உதவும் இலக்கியங்கள் எவையும் இல்லை. பிற சான்றுகளைக் கொண்டே இவர்களின் வரலாறு ஆய்வுசெய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக கல்வெட்டுகள், பட்டயங்கள், நாணயங்கள், ஐரோப்பியர் கால இலக்கியங்கள், வெளிநாட்டு இலக்கியங்கள், தேசசஞ்சாரிகளின் குறிப்புகள் போன்றவற்றின துணைக்கொண்டே இலங்கையில் உள்ள இஸ்லாமியரின் வரலாறு தொடர்பான நூல்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலைக்கு இஸ்லாமியரிடையே வரலாறு எழுதும் வழக்கம் காணப்படாமையே காரணமாகும். இலங்கையில் இஸ்லாமிய மதம் இருமுறைகளில் பரவியது. முதலாவது கிறிஸ்துவுக்கு முட்பட்ட காலம் தொட்டே இலங்கைக்கும் அரேபியருக்கும் இருந்த வாணிபத்தொடர்பின் விளைவாக இம்மதம் இலங்கையில் பரப்பப்பட்டமை. இரண்டாவது இந்தியாவிற்கு அண்மையில் இலங்கை காணப்படுவதால் இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் இங்கு குடியேறியமை என்பவையாகும்.


### 1.1. மாத்தளை மாவட்டத்தின் சுற்றுலாத்தளங்கள்

இலங்கையின் மத்திய மாகாணத்தின் வடக்கில் அமைந்துள்ள மாத்தளை மாவட்டத்தின் வடக்கு எல்லையாக அநுராதபுரமும், கிழக்கு எல்லையாக பொலன்னறுவையும், தெற்கு எல்லையாக கண்டியும், மேற்கு எல்லையாக குருணாகலும் அமையப்பெற்றுள்ளன. பழைமையான இரண்டு பரந்த மலைத்தொடர்களுக்கு இடையில் அமைந்துள்ளமையினால் இவ்விடம் ஆரம்பக்காலங்களில் ''மகாதல'' என அழைக்கப்பட்டது, இப்பெயரே மறுவி இன்று மாத்தளை என்றாயிற்று. (புவாஜி.ஏ.ஏ.எம், 2001, ப-3) இலங்கையின் பழைமையான பாறைகளை உள்ளடக்கியதாக இம்மாவட்டத்தின் லக்கல பிரதேசம் காணப்படுகின்றது. இப்பகுதி பன்மைக்கலாசார மக்களைக் கொண்டுள்ளதுடன், அவர்களுக்கு உரிய வரலாற்று சிறப்புகளைக் கொண்ட கலாசார மையங்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இவை சுற்றுலாப்பயனிகளையும் கவரும் இடங்களாகவும் உள்ளது. இவற்றுக்கு உதாரணங்களாக உலக அதிசயங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிகிரியா, தம்புள்ளை குகை விகாரை, முத்துமாரியம்மன் கோவில், அலுவிகார விகாரை, (https://en.m.wikipedia.org/wiki/Matale) வஹாகொட கிறிஸ்தவ தேவாலயம், கோட்டகொடை பள்ளிவாசல் (புவாஜி.ஏ.ஏ.எம்,1993,ப.28) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை தவிர யுனிஸ்கோவினால் பாரம்பரியமிக்கதாக பாதுகாத்து வருகின்ற நக்கிள்ஸ் மலைத்தொடர், சுளைநசளவழநெஇ ஆலைளெ றுழசடனநனெ, செம்புவத்த குளம், ஹுன்னஸ்ஸ நீர்வீழ்ச்சி (https://en.m.wikipedia.org/wiki/Matale_District) போன்ற சுற்றுலாத்தளங்களும் காணப்படுகின்றன. இப்பகுதியின் இயற்கையம்சம் நிறைந்த சுற்றுலாத்தளங்களில் செம்புவத்தை ஓர் மனித படைப்பாகும்.

### 1.2. மாத்தளை இஸ்லாமியர்

இலங்கையின் மத்திய மாகாணத்தின் வடக்கில் அமைந்துள்ள மாத்தளை மாவட்டத்தில் இன்று பல்லின மக்கள் கூட்டத்தினர் வசித்து வருகின்றனர். இவர்கள் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதோடு கலாச்சார, மொழி ரீதியாகவும் ஒன்றுபட்டு காணப்படுகின்றனர். இம்மாவட்டத்தின் வடக்கு எல்லையாக அநுராதபுரமும், கிழக்கு எல்லையாக பொலன்னறுவையும், தெற்கு எல்லையாக கண்டியும், மேற்கு எல்லையாக குருணாகலும் அமையப்பெற்றுள்ளன. இன்று இவற்றுள் கண்டியுடன் மாத்தளை மாவட்டமானது வேறுப்படுத்தி பார்க்க இயலாத பண்பாட்டு, அரசியல், பொருளாதார தொடர்புகளையும், ஒற்றுமைகளையும் கொண்டு காணப்படுகின்றது. கி.பி 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளிலிருந்தே மாத்தளையில் இஸ்லாமியரின் குடியேற்றங்கள் நிறுவப்படத் தொடங்கிவிட்டது. இன்று இப்பிரதேசத்தில் இவர்களும் முக்கியத்துவம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். இங்கு சனத்தொகை அடிப்படையில் சிங்களவர், தமிழர்களுக்கு அடுத்தப்படியாகவே இவர்கள் காணப்படுகின்றனர்.




மாத்தளையில் அனைத்து பிரதேசங்களிலும் பரவலாக இவர்கள் வாழ்கின்றபோதிலும் மாத்தளை நகர் பகுதிகள், வரக்காமுற, கலேவெல, உக்குவளை, இரத்தொட்ட, யட்டவத்த, தம்புள்ள, பல்லேபொல, நாவுல, நிகொல்ல போன்ற இடங்களிலேயே அதிகம் வாழ்கின்றனர். 2017ஆம் ஆண்டிற்கான மாவட்ட செயலகத்தின் கணக்கெடுப்பின்படி மாத்தளையில் அரசு பதிவிற்குட்பட்டனவாக 69 மசூதிகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் பிரசித்தி பெற்றதாக கோட்டே கொடை மசூதி காணப்படுகின்றது. இங்கு ஆரம்பகாலங்களில் இனப்பிரச்சினைகள் நடைப் பெற்றிருப்பினும் இன்று இன ஒற்றுமைக்கு பெயர்போன இடமாக இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் குடியேறியது எப்போது, எங்கிருந்து குடியேறினர் என்பது தொடர்பாக தெளிவான தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறாத படசத்திலும், சில ஆதாரங்களின் துணைக்கொண்டு ஓரளவு மாத்தளை முஸ்லிம்களின் வரலாறு எழுதப்படடுள்ளது. இவற்றில் ஐரோப்பியர்கால நூல்கள், குறிப்புகள், காணி உறுதி பத்திரங்கள், பிற்பட்ட ஆய்வாளர்களின் ஆய்வுகள், குடிசனமதிப்பு அறிக்கைகள், அரசாங்க திணைக்களங்களின் பதிவுகள் என்பன முக்கியமானவையாகும்.

### 1.3. செம்புவத்தை சுற்றுலாத்தளம்

மலையகத்தில் உள்ள சுற்றுலாத்தளங்களில் ஒன்றான செம்புவத்தை குளமானது மாத்தளை உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட எல்கடுவ பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடம் 1100 மீட்டர் உயரத்தினை கொண்டுள்ளதுடன், மாத்தளை நகர்பகுதியிலிருந்து 25 கி.மீ தொலைவிலும், கண்டியிலிருந்து 30 கி.மீ தொலைவிலும் காணப்படுகின்றது. (www.sembuwattalake.com/index.html) நக்கிள்ஸ் மலைத்தொடரின் மேற்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இவ்வடம் ஓர் தனிமனித படைப்பாகும். கடந்த 5 வருட காலங்களிலேயே இப்பகுதி உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயனிகளை ஈர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்ப காலங்களில் எல்கடுவ தோட்டம் என அழைக்கப்பட்ட இவ்விடம் செம்புவத்தை என்ற பெயரினைப் பெற்றுக் கொண்டமைக்கு காரணமாக முன்னர் இவ்விடத்தில் ஒரு தங்கச்செம்பு கண்டெடுக்கப்பட்டமையை குறிப்பிடுகின்றனர். (https://m.youtube.com/watch?v=QHNHHZKQOt8) இதில் வத்த என்பது சிங்கள மொழியில் தோட்டத்தைக் குறிக்க பயன்படுத்தும் சொல்லாகும். செம்பு கிடைக்கப்பெற்ற தோட்டம்(வத்த) என்பது மறுவியே காலப்போக்கில் இவ்விடம் செம்புவத்த என்ற பெயரை பெற்றுக்கொண்டது. இங்கு செல்வதற்கு அனைத்து வாகனங்களுக்கும் அனுமதி கிடைப்பதில்லை. ஏனெனில் இப்பகுதிக்குறிய ஒழுங்கற்ற பாதைகள் ஆபத்தானவை என்பதுடன் அவற்றில் ஒரே நேரத்தில் இருவாகனங்கள் பிரயாணம் செய்வது கடினமாகும். இப்பாதைகள் ஆங்கிலேயரது காலத்தில் அமைக்கப்பட்டவையாகும்.

கி.பி 1815 இல் இலங்கை முழுவதையும் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலேயரினால் இந்தியாவிலிருந்து அடிமைகளாக மக்கள் கொண்டுவரப்பட்டு மலைப் பகுதிகளில் பெருந்தோடடப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போதே கி.பி.1960களின் (backpackerduo.com/sembuwatta-laka) பின்னர் எல்கடுவ பகுதியும் தேயிலை தோட்டமாக மாற்றப்பட்டது. அப்பகுதியிலிருந்த தேயிலைத் தொழிற்சாலைக்கு தேவையான மின்சாரம் அங்கு காணப்பட்ட குளத்திலிருந்து நீர்மின் உற்பத்தியினூடாகவே பெறப்பட்டுவந்தது. இக்குளத்தினருகில் பைனஸ் தோட்டங்கள், பங்ளாக்கள், கோல்ப் விளையாட்டிற்கான மைதானம் என்பன அமைக்கப்பட்டிருந்தது. ஆங்கியேரால் இக்காலப்பகுதியில் ஓரளவு பிரசித்திபெற்ற இவ்விடம், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் கி.பி.1987 அங்குள்ள தொழிற்சாலைகளும் மூடப்பட்டதன் காரணமாக கைவிடப்பட்டது. நீண்டகாலமாக பராமரிப்பின்றி கிடந்த எல்கடுவ பிரதேசம் 2005 ஆம் ஆண்டு அப்பகுதிக்கு தோட்ட நிர்வாகியாக பதவியேற்ற ரட்லி திசாகே என்பவரின் முயற்சியினால் இன்றைய நிலையினை பெற்றுக்கொண்டது. செம்புவத்தை தொடர்பாக ரட்லி குறிப்பிடுகையில் ''தான் பதவியேற்ற காலப்பகுதியில் 5 மில்லியன் பெறுமதியான தோட்டங்கள் மூடப்பட்டிருந்தமையாலும், அவறற்றறின் அவசியத்தை தான் உணர்ந்துக் கொண்டமையாலும் அதனை புணரமைக்கும் நடவடிக்கையில் ஈடுப்பட வேண்டியேற்பட்டது'' என்கிறார். (https://m.youtube.com/watch?v=QHNHHZKQOt8) சுற்றிலும் பனிமூட்டம் நிறைந்த மலைகளால் சூழப்பட்ட தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் காணப்படும் பாரியக் குளம், நீர்வீழ்ச்சி, பொழுதுபோக்கு அழகியல் அம்சங்கள் யாவும் அரச ஆதரவுடன் செயற்கையாக உருவாக்கப்பட்டவைகளேயாகும்.

ஆரம்பக்காலங்களில் புனரமைப்பு மேற்கொள்ளப்படும்வரை செம்புவத்த குளம் சிறியதாகவே காணப்பட்டதுடன், பின்னரே அது இன்றுபோல் பெரியதாக வடிவமைக்கப்பட்டது. அப்பிரதேச மக்களின் கருத்துப்படி அக்குளம் 20-30 அடி ஆழமானதாகும். செயற்கையாக அமைக்கப்பட்ட பகுதிகள் சுமார் 5 அடி ஆழத்தைக் கொண்டுள்ளது. (www.sembuwattalake.com/index.html) ஆழமற்றது போன்று காட்சியளிக்கும் இக்குளத்தின் நீர் குளிர்தன்மை நிறைந்த அதிக அடர்த்தியை கொண்டது என்பதால் இதில் நீந்துவது கடினமானதாகும். இக்குளத்தில் குளிப்பதற்காகச் சென்றதில் அதிகமானோர் இறந்ததன் காரணமாக இன்று குளிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இங்குவரும் சுற்றுலாப் பயணிகளுக்காக ஊற்றுநீரைப் பயன்படுத்தி ஆறுகளில் நீர் ஓடிக்கொண்டிருப்பதைப்போல செயற்கையான நீச்சல்த்தடாகம் ஒன்றும்

அமைக்கப்பட்டுள்ளது. இயற்கை விரும்பிகளுக்காகவும், புகைப்படக் கலைஞர்களுக்காகவும் அமைக்கப்பட்ட இப்பகுதியில் படகு சவாரிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மலையுச்சியில் உள்ள குளம் என்பதால் அதில் படகு சவாரி செய்யும்போது பறவையின் வாழ்க்கை அனுபவத்தைக் கொடுப்பதாகவும், இவ்வனுபவம் இலங்கையில் வேறெங்கும் கிடைப்பதில்லையென்றும் இங்கு படகுசவாரி செய்வோர் குறிப்பிடுகின்றனர்.( www.sembuwattalake.com/index.html) இங்கு ஏராளமான ஓய்வு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

செம்புவத்த குளத்தினைச் சுற்றிலும் ஓலையினால் நெய்யப்பட்ட கூரையினைக் கொண்ட சிறிய குடில்களும், ஓய்வுவிடுதிகளும் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் சமைத்து உண்பதற்கான அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் கட்டணமும் அறவிடப்படுகின்றது. சிறுவர்களுக்கான விளையாட்டு அம்சங்களுடன், வித்தியாசமான பறவைகளை கண்டுகளிக்கவும் அவற்றின் ஒலிகளை செவிமடுக்கவும் கூடிய இடமாக உள்ளமை இவ்விடத்தின் சிறப்பம்சமாகும். இப்பகுதியில் பைன் மரங்கள், பனிமூட்டம் கொண்ட மலைகள், தேயிலைத்தோட்டங்கள், நீர்வீழ்ச்சி, பாறைகள், குளம் என பல சவால்மிகுந்த இயற்கையம்சங்களை தாங்கிய இடங்கள் ஒன்றுசேர காணப்படுகின்றன. இதனால் இவ்விடம் தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கும் இடமாகவும், திரைப்படங்கள் விளம்பரங்கள் ஒளிபதிவு செய்வதற்கும் ஏற்ற இடமாக உள்ளது. இங்கு செல்வதற்கு உள்நாட்டு பயணிகளுக்கு 200 ரூபாயும், வெளிநாட்டு பயனிகளுக்கு 1000 ரூபாயும், படப்பிடிப்புகளுக்கு 5000 ரூபாயும் கட்டணம் அறவிடப்படுவதுடன், காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப்பகுதிகளிலேயே இங்கு செல்லமுடியும். இவ்விடம் முழுவதும் எல்கடுவ தோட்டத்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினாலேயே பராமரிக்கப்பட்டுவருகின்றது. இன்று இப்பகுதிக்கு அதிகமாக இஸ்லாமியரே வருகைத்தருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 2. ஆய்வு முறையியல்

### 2.1. ஆய்வுநோக்கம்

ஆய்வானது பொதுவாக இரண்டு வகையான நோக்கங்களைக் கொண்டு காணப்படும்.

பொது நோக்கம்.

செம்புவத்தையை நோக்கி இஸ்லாமியரின் வருகை அதிகமாக இடம்பெறுவதற்கான காரணங்களை கண்டறிதல்

சிறப்பு நோக்கங்கள்

இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு மாத்தளை மாவட்டத்தின் பங்களிப்பை எடுத்துக்காட்டல்

செம்புவத்தை சுற்றுலாத்தளத்தின் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டல்

### 2.2. ஆய்வுபிரதேசம்

இவ்வாய்வானது மாத்தளை மாவட்டதினை எல்லையாக கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

### 2.3. ஆய்வின் முக்கியத்துவம்

செம்புவத்தை பகுதி அண்மைக்காலமாகவே ஓர் சுற்றுலாத்தளமாக பிரசித்திபெற்று வருகின்ற நிலையில் இஸ்லாமியரின் மதநம்பிக்கை அப்பகுதியுடன்

தொடர்புபடுத்தப்படுவதற்கான காரணங்களையும், அது தொடர்பான உண்மை நிலையினையும் கண்டறிவதற்கு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுதல் அவசியமாகும்.

**2.4. ஆய்வு முறையியல்**

இவ்வாய்விற்காக முதலாந்தர தரவாக நேர்காணல் காணப்படுகின்றது. இரண்டாந்தர தரவுகள் நூல்கள், இணையம், ஆய்வுகட்டுரைகள், சஞ்சிகைகள் என்பன காணப்படுகின்றன.

**2.5. கருதுகோள்**

H1 மத்திய மலைநாட்டில் மாத்தளையுடனேயே இஸ்லாமியர் அதிக தொடர்புகளை பொருளாதார, பண்பாட்டு ரீதியாக கொண்டிருந்தனர்.

H2 செம்புவத்தையுடனான இஸ்லாமியரது தொடர்புகள் உண்மையாக காணப்படுவதற்கான ஆதாரங்கள் பலவற்றை முன்வைக்கின்றபோதிலும், அதுதொடர்பான மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் அவசியமாகும்.

H3 மாத்தளை செம்புவத்தை சுற்றுலாத்தளதிற்கும் இஸ்லாமியருக்குமான தொடர்கள் தொடர்பான கதை வர்த்தக நோக்கில் கூறப்பட்டதா அல்லது உண்மைச்சம்பவமா என்பது தொடர்பாக தெளிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதாகும்.

**3. ஆய்வுப் பகுப்பாய்வு**

இவ்வாய்வானது முதலாந்தர, இரண்டாதர தரவுகளின் அடிப்படையில் விவரண பகுப்பாய்வின் ஊடாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**3.1. செம்புவத்தைக்கும் இஸ்லாமியருக்குமான தொடர்புகள்**

வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இலங்கை முழுவதும் பரவலாக செல்கின்றபோதிலும், இஸ்லாமியரது வருகை கூடுதலாக Adam's Peak எனப்படும் சிவனொலிபாத மலையை நோக்கியதாகவே காணப்படுகின்றது. இருப்பினும் அண்மைக்காலமாக மாத்தளை செம்புவத்தை பிரதேசத்தை நோக்கிய அவர்களது வருகையானது பலரை ஆச்சரியத்திற்கு உற்படுத்தியுள்ளது. இவ்விடத்தின் இயறகைத்தன்மைகளை காணவே இவர்கள் வருவதாக சிலர் குறிப்பிட்டபோதிலும், மதநம்பிக்கையின் காரணமாவே தாங்கள் வருவதாக அங்குவரும் உள்நாட்டு இஸ்லாமியர் கருத்து தெரிவிக்கின்றனர். அதாவது தமது இஸ்லாமிய தூதுவர் ஒருவர் இலங்கை வந்ததாகவும், அவர் தனது தொழுகை கடமையினை நிறைவேற்றுவதற்காக இவ்விடத்தில் காணப்பட்ட குளத்தில் முகம், கால், கைகளைக் கழுவிக்கொண்டதாகவும் (வுளூ எடுத்தல்) ஒரு நம்பிக்கையினாலேயே இவர்களது வருகை அதிகரித்துள்ளது. (மோகனகிருஸ்ணன்.இ, முகாமையாளர், 2018) ஆங்கிலேயரது காலத்திற்கு பின்னர் பல வருடங்களாக மூடிக்கிடந்த இடத்தை புனரமைத்த சிலகாலங்களிலேயே இவ்வாறான நிகழ்வுகளை தொடர்புபடுத்திய இஸ்லாமியரின் வருகை பலரை வியப்பிலாழ்த்தியுள்ளது. இங்கு இஸ்லாமியர்கள் சமைத்து உண்டு அதிக நேரத்தை செலவிடுவதுடன், மாத்தளையில் அதிக இஸ்லாமியர்கள் வரும் இடமாக செம்புவத்த பகுதி மாற்றம் கணடுள்ளது.

அண்மைக்காலமாக உள்நாட்டு, வெளிநாட்டு முஸ்லம்களிடையே பரவிவரும் இந்நம்பிக்கையானது வியாபார நோக்கில் கூறப்பட்டதொன்றாக கூட இருக்கலாம் என்பது சிலரது வாதமாகும். இக்கருத்திற்கு உடன்படக்கூடிய வகையில் இந்நிகழ்வு தொடர்பான விடயங்கள் எதுவும் வரலாற்று இலக்கியங்களிலோ இஸ்லாமிய வரலாற்று நூல்களிலோ குறிப்பிடப்படவில்லை. மாத்தளையிலும் 18ஆம் நூற்றாண்டு தொடக்கம் முஸ்லம்களின்

வாழ்ந்து வருகின்றபோதிலும் இத்தகையதொரு நம்பிக்கை அவர்களிடம் காணப்படவில்லை. இருப்பினும் அரேபியருக்கும் இலங்கைக்குமான நீண்டகால தொடர்புகளைக் கொண்டு இச்சம்பவம் உண்மையானதாக இருந்திருக்க வாய்ப்புள்ளமையை எடுத்துக்காட்ட முடியும். இலங்கையில் மலையகத்தில் உள்ள சிவனொலிப்பாத மலையானது நான்கு மதத்தினருடைய மத நம்பிக்கைக்குட்பட்ட ஓரிடமாக விளங்குகின்றது. இம்மலையை இஸ்லாமியரகள் பாவா ஆதம் மலை என அழைக்கின்றனர். அதாவது சொர்க்கத்தில் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஆதம் மற்றும் ஹவ்வா அலை அவர்களின் படைப்பின் நிபந்தனைகளில் ஒன்றாக அப்பிள் கனி மரமொன்றை நாடக்கூடாது என்றும் அதனை நாடினால் ஆபத்து விளையும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும் அதனை மீறி அக்கனியை உண்டதனால் பூமிக்கு அனுப்பப்பட்ட ஆதம், ஹவ்வா வந்திறங்கிய இடமே ஆதம் மலை என நம்பிக்கை கொண்டுள்ளனர். இம்மலையுடனான இஸ்லாமியரது தொடர்புகளைப் போலவே செம்புவத்தையுடனான நம்பிக்கைகளும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரேபியருக்கும் இலங்கைக்குமான வர்த்தக உறவுகளானது நீண்டகால வரலாற்றினைக் கொண்டவைகளாகும். இவர்களாலேயே இலங்கையில் இஸ்லாமிய மதம் பரப்பப்பட்டது. இஸ்லாத்தில் நபி அவர்கள் இறுதித்தூதுவர் ஆவார். அவருக்கு முன்னர் பல தூதுவர்கள் வந்ததாகவும், அவர்களுடைய சிந்தனைகள் மாற்றப்பட்டதன் காரணமாக இறுதியாக நபி அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்டதாக இஸ்லாமியர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நபிகளுக்கு முற்பட்ட தூதுவர் யாரேனும் இலங்கைக்கு வந்தபோது செம்புவத்தை மலையை அடைந்திருக்கலாம். ஏனெனில் ஆதிக்காலங்களில் ஒவ்வொரு ஊர்களுக்கும் மலைகளையும் நதிகளையுமே எல்லைகளாகக் கொண்டிருந்தனர். அதனால் மலைகளைக் கடந்து போகின்றவேளையில் நீர்கிடைத்த இடத்தில் ஓய்வெடுத்துச் சென்றிருக்கலாம். அரேபியரின் கண்டியுடனான இத்தகைய தொடர்புப் பாதைகளுக்கு ஆதாரமாக சில நிகழ்வுகளை முன்வைக்கமுடியும்.

உலகின் முதல் வரைப்படம் தொலமியினாலேயே வரையப்பட்டது. அதில் அவர் இலங்கையை 'தப்ரபேன்'(வுயிசழடியநெ) என்ற பெயருடன் வரைந்துள்ளமையானது (லரீப் சுலைமான், 2014, ப-18) இலங்கையுடனான கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஐரோப்பியரது தொடர்புகள் எத்தகையது என்பதை பறைசாற்றி நிற்கின்றன. இதனைப்போன்று அரேபியர்களும் இலங்கையை செரண்டீப் தீவு என்றே அழைத்துவந்தனர். பருவக்காற்றின் உதவியுடன் கடல்பயணம் மேற்கொள்ளும் முஸ்லிம்களின் மூதாதையர்களான அரேபியர்கள், நபிகள் நாயகம் அவர்களுடைய தோற்றத்திற்கு ஆயிரம் வருடங்களுக்கு முந்திய காலத்திலிருந்தே இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். இவற்றை உறுதிப்படுத்துவனவாக சில ஆதாரங்களைக் காணப்படுகின்றன. அவையாவன,

- கி.மு.523-475 வரையான காலப்பகுதியில் பலஸ்தீனத்தை ஆட்சி செய்த சுலைமான் நபி அவர்களினால் கட்டப்பட்ட பைத்துல் முகத்தஸ் பள்ளியில் இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட மாணிக்கக்கல் பதிக்கப்பட்டுள்ளது. (அல்ஹாஜ் மௌலவி, 1985, ப-7)
- கி.மு.437 இல் அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பண்டுகாபயன் தனது தலைநகரின் வடபகுதி வாசலருகே யோனான்களுக்காக (அரேபியர்) நிலம் ஒதுக்கியிருந்தமையை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. (அல்ஹாஜ் மௌலவி, 1985, ப-6)
- கி.பி.414 இல் இலங்கை வந்த சீன யாத்திரிகரான பாகியன் தென் அரேபிய வர்த்தகர்களைக் இலங்கையில் கண்டதாக தனது பயணக்குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். (அல்ஹாஜ் மௌலவி, 1985, ப-7)
- கி.பி.628இல் நபி அவர்கள் இலங்கை அரசனை இஸ்லாத்திற்கு அழைக்கும் நோக்கில் ஒரு கடிதத்தினை வஹாப் இப்னு அபிஹப்ஸா என்பவரிடம்

கொடுத்தனுப்பியதாகவும், அவரை ஆதரித்த அரசன் இஸ்லாத்தை பரப்ப சம்மதித்தாகவும், அவர் இலங்கையில் இருந்த அரேபியருக்கு இஸ்லாத்தை போதித்ததாகவும் எம்.சி.சித்திலெப்பை மற்றும் ஹுசைன் இப்னு முகம்மது எழுதிய அல்கியா பாக்கரி என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அல்ஹாஜ் மௌலவி, 1985, ப-8)

- கி.பி முதலாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை துறைமுகங்களில் அரேபியர் காணப்பட்டமையை வுாந ீநசமிரள ழுக வுாந நுசலவாசயநயெ ளுநய என்ற கிரேக்க நூல் குறிப்பிடுகின்றது. (லரீப் சுலைமான், 2014, ப-21)
- திருகோணமலையில் கி.பி 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு நடுகற்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் யாவும் அரபு எழுத்துக்களால் செதுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி 12 - கி.பி 14 நூற்றாண்டு காலங்களைச் சேர்ந்த "குபி" எழுத்துருவில் அமைந்துள்ளமை.(ஜெகநாதன்.ஞா. ப.151)
- முத்துராஜவெல எனும் இடத்தில் எடுக்கப்பட்ட புதையலில் கி.பி 705 - கி.பி 796 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இரண்டு அரபு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டமை.(ஜெகநாதன்.ஞா. ப.151)
- நீர்க்கொழும்பு, வத்தளை, கம்பளை, சப்ரகமுவ, வெலகெதர ஆகிய இடங்களில் கி.பி 11ம் - கி.பி 13ம் நூற்றாண்டு காலங்களைச் சேர்ந்த அரபு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.(ஜெகநாதன்.ஞா. ப.151)

என்பவையாகும். இவற்றுடன் கி.பி.150 இல் தொலமியினால் வரையப்பட்ட இலங்கையின் வரைப்படத்தில் 5 நதிகள் குறிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெயர்கள் மகாவலி கங்கைக்கு பாஸிஸ் பலூஸியஸ் (பாரசீகர் நதி), தெதுரு ஓயாவிற்கு சோனா பலூஸியஸ் (அரேபியர் நதி), ஜின் கங்கைக்கு அஸனாக் பலூஸியஸ் (எதியோப்பிய நதி) என வெளிநாட்டவரின் பெயர்களின் ஊடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மகாவலி கங்கை அருகில் அரேபியர்கள் வாழ்ந்திருக்கலாம் என்பதை ஊகிக்கமுடியுமே தவிர உறுதிப்படுத்துவது கடினமானதாகும். ஏனெனில் மகாவலி கங்கை அருகில் இயக்கர்களே வாழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. (லரீப் சுலைமான், 2014, பக்-14-15) 'ர்ளைவழசஉை ஆயவயடந' என்ற நூலிலும் மகாவலியை அண்மித்த மாத்தளைப் பகுதி இயக்கினி குவேனியின் தந்தையின் ஆட்சிப்பகுதியாக காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. (யேலயமய வுாநசழஇ 1984இ ி-3) இருப்பினும் இஸ்லாமியரின் மாடுகளை போக்குவரத்திற்காக உபயோகப்படுத்தும் 'தவளம்' முறையை நினைவுபடுத்தும் வகையில் மாத்தளை உக்குவளை பிரதேசத்திற்கு அண்மையில் தவளங்கொய்யா என்ற பெயரினைக் கொண்ட ஓர் ஊர் உள்ளது.

அரேபியர்கள் பாலைவனத்தில் பிரயானம் செய்யவும் பொதிகளை சுமக்கவும் ஒட்டகங்களையே பயன்னடுத்தினர். (லரீப் சுலைமான், 2014, ப-21) அவ்வாறே இலங்கையின் துறைமுகங்களில் இருந்து தமது பொருட்களைக் நாடு முழுவதும் கொண்டு செல்வதற்காக ஒட்டகங்கள் இல்லாமையினால் மாடுகளைப் பயன்படுத்தினர். இவ்வாறு இவர்கள் மாடுகளுடன் பயணிக்கும் போது ஓய்வெடுப்பதற்காக பல இடங்களில் தங்கிச் சென்றனர். இவை காலப்போக்கில் அவர்களது குடியிருப்புகளாக மாறின. இவ்வாறாக இலங்கையுடனான இவர்களது தொடர்புகளைக் கொண்டு நோக்கும் பொழுது, சிலநேரங்களில் மலைகளைக் கடந்த அவர்களது பயணப்பாதைகளில் செம்புவத்த மலைத்தொடரும் ஒன்றாக காணப்பட்டிருக்கலாம். அதோடு இஸ்லாமியருக்கு வரலாறு எழுதுகின்ற வழக்கம் இல்லாமையினால் இச்சம்பவம் சம்பந்தப்பட்ட தகவல்கள் எழுதப்படாமல் போயிருக்கலாம், இல்லையேல் தமது தாய்நாட்டிற்கு திரும்பியவர்களினால் குறித்து

வைக்கப்பட்டிருக்கலாம். ஆகவே செம்புவத்தையுடனான இஸ்லாமியரது நம்பிக்கை உண்மைச்சம்பவமாக இருக்கலாம் என்பதனை ஒருவகையில் ஊகிக்கமுடியும்.

## 4. ஆய்வு முடிவுகளும், பரிந்துரைகளும்

இஸ்லாமியர்கள் இஸ்லாமிய மத தோற்றத்திற்கு முன்பிருந்தே இலங்கையுடன் வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுவதன் ஊடாக செம்புவத்தை தொடர்பான இஸ்லாமியர்களின் நம்பிக்கை உணமைச்சம்பவமாகவே காணப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் மத்திய மலைநாட்டின் ஆதாம் மலையை தரிசிக்க வந்த இஸ்லாமியர்களின் குடியேற்றத்திற்கு உட்பட் முக்கியப்பகுதி மாத்தளையே ஆகும். ஆகவே இத்தாடர்பை ஏற்றுக்கொள்ளலாம். இருப்பினும் மாத்தளை முஸ்லிம்கள் மத்தியில் நீண்டகாலமாக இதுதொடர்பான நம்பிக்கை காணப்படாமைக்கான காரணம், மாத்தளை மாவட்டத்தின் வரலாற்று ஆய்வுகள் குறைந்தளவில் காணப்படுகின்றமையே ஆகும்.
செம்புவத்தையுடனான இஸ்லாமியரின் தொடர்புகள் சிலவேளைகளில் கட்டமைக்கப்பட்ட ஓர் விடயமாகக்கூட இருக்கலாம். ஏனெனில் மாத்தளை மாவட்டத்தின் வரலாறு தொடர்பான ஆய்வுகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. வரலாற்றாய்வு துறையில் தேர்ச்சிபெற்றவர்கள் அப்பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ள கவனம் செலுத்தவேண்டும் என்பதோடு, இலங்கை அரசும் அதற்கான உதவிகளை வழங்க வேண்டும் என்பதும் முக்கியமானதொன்றாகும்.

## 5. சாராம்சம்

இவற்றை தொகுத்து நோக்குகின்ற பொழுது, மாத்தளை செம்புவத்தை அண்மைக்காலமாக பிரசித்தி பெற்றுவருகின்றதோர் சுற்றுலாத்தலமாகும். இதற்கு வருகைத்தரும் இஸ்லாமியர்கள் அனைவரும் சமயநோக்கில்தான் வருகின்றனரா அல்லது அவ்விடத்தின் இயற்கையழகினை இரசிப்பதற்காக வருகின்றனரா என்ற கேள்விகளுக்கான விடைகளைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். செம்புவத்தை பகுதி ஆங்கிலேயரால் அடையாளப் படுத்தப்பட்டிருந்தபோதிலும், அங்கு ஏற்கனே மக்கள் வாழ்ந்திருக்கலாம். செம்புவத்தையில் கண்டெடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் தங்கச் செம்பு ஒருவேளை அரேபிய வரத்தகர்கள் அவ்வழியாக சென்றபோது தவரவிட்டதாகக்கூட இருக்கலாம். இஸ்லாமியர்கள் வர்த்தகத்தில் சிறந்தவர்கள் என்பது யாவரும் அறிந்ததோர் விடயமேயாகும். கண்டி இராச்சியத்துடனான தமது வரத்தக தொடர்புகளுக்கு இலங்கையின் கிழக்கு கரையோரத்துறைமுகங்களை பயன்படுத்திய இவர்களுடைய பயணப்பாதையில் மாத்தளை முக்கிய பங்குவகித்தைமக்கான ஆதராங்களும் காணப்படுகின்றன. எனவே செம்புவத்தையுடனான இஸ்லாமியரது தொடர்புகள் பற்றிய ஆய்வுகள் ஆழமாக மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமானதாகும்.

**உசாத்துனைகள்**


1. புவாஜி.A.A.M. (2001), மாத்தளை மாவட்டத் தமிழர்கள் வரலாறும் பாரம்பரியமும். மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்புமலர். இந்துக் கலாசார அமைச்சு. பக். 3-7.
2. புவாஜி.யு.யு.ஆ.(1993), மாத்தளை மாவட்ட முஸ்லிம்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அலுவலகம், பக். 23-75.
3. அல்ஹாஜ் மௌலவி, அப்துல் ஜவாத்.யு.டு., சுபைர்.ளு.ஆ.ஆ.(2004), காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம், பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், பக். 6-11.
4. லரீப் சுலைமான் (2014), இறக்காமம் வரலாறு சமூகம் வாழ்வியல், இறக்காமம் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம், பக். 12-32.
5. மோகனகிருஸ்ணன்.இ. (08.07.2018), செம்புவத்தை விடுதி முகாமையாளர், நேர்காணல் (நேரம்- 10.00ய.அ - 11.00ய.அ).
6. கௌசிகன், 2003, உலகமகா நாகரிகங்கள், பக். 338-340.
7. ஜெகநாதன்.ஞா., நாகர் எழு வன்னி, பக். 147-158.
8. https://m.youtube.com/watch?v=QHNHHZKQOt8. October 02, 2018
9. www.sembuwattalake.com/index.html
10. https://m.youtube.com/watch?v=QHNHHZKQOt8
11. https://en.m.wikipedia.org/wiki/Matale
12. https://en.m.wikipedia.org/wiki/Matale_District
13. http://backpackerduo.com/sembuwatta-lake/